# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2026 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தச்) சட்டம்

---

**[2026 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]**

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2026, செத்தெம்பர் மாதம் 11 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2026 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தச்) சட்டம்

[2026 ஆம் ஆண்டு செத்தைம்பர் மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.-ஒ 55/2025

## 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

1. இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெண் களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கச் சட்டத்தின் 7 ஆம் பிரிவினைத் திருத்துதல்

2. (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1956 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க, பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளை களையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் 7 ஆம் பிரிவானது, அதன் (3) ஆம் உட்பிரிவில் “பத்தாயிரம் ரூபாவை” என்னும் சொற்களுக்குப் பதிலாக “ஒரு இலட்சம் ரூபாவை” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவினைத் திருத்துதல்

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவானது அதன் (2) ஆம் உட்பிரிவில் “பத்தாயிரம் ரூபாவை” என்னும் சொற்களுக்குப் பதிலாக “ஒரு இலட்சம் ரூபாவை” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20அ என்னும் பிரிவினைத் திருத்துதல்

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20அ என்னும் பிரிவானது அதன் (3) ஆம் உட்பிரிவில் “பத்தாயிரம் ரூபாவை” என்னும் சொற்களுக்குப் பதிலாக “ஒரு இலட்சம் ரூபாவை” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் புரியப்பட்ட தவறுகள்

5. பிரிவுகள் 7, 13 மற்றும் 20அ என்பவற்றுக்கு செய்யப்பட்ட திருத்தங்கள், இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் ஏதேனும் தவறு புரியப்பட்டுள்ளவிடத்து மேலேயுள்ள பிரிவுகளின் கீழ் புரியப்பட்ட அத்தகைய தவறு தொடர்பில் ஏற்புடையதாதல் ஆகாது என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

6. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

PL 15864 - 563 (2026/07)

பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம் இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக் கொள்ள முடியும்